(முற்பகல் 10-10)

2. தகவல் கோரல்

(அ) மாநில அரசு ஊழியர்களுக்குக் கிராக்கிப்படியை உயர்த்துவது

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, நம்முடைய பொது விவாதத்தை இறுதிப்படுத்திவைத்து நமது நிதி அமைச்சர் அவர்கள் பதில் சொல்கின்ற காலத்தில், மாநில அரசு ஊழியர்களுக்கு 4 கிராக்கிப்படி கொடுக்கவேண்டிய விஷயத்தைப் பற்றி மத்திய அரசு முடிவு எடுத்தவுடனே நாங்கள் முடிவு எடுத்து அறிவிப்போம் என்று குறிப்பிட்டார்கள். மத்திய அரசு முடிவெடுத்தாகிவிட்டது. முடிவு வெளிவந்துவிட்டது; நம்முடைய அரசு அதுபற்றி என்ன.........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாநில அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்ததற்கு நன்றி. (குறுக்கீடு) நிதி அமைச்சர் இங்கில்லை. நிதி அமைச்சர் டெல்லியிலே இருந்து வந்தவுடனே நாளை, அல்லது நாளைய மறுதினம் சொல்வார். பொறுத்துக் கொள்ளுங்கள்.

(ஆ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிப்புகள்

திரு. பாபு ஜனார்த்தனன் : பேரவைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆட் ஆர்டர். நம்முடைய திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் திரு.கி. வீரமணி அவர்கள் இஸ்மாயில் கமிஷன் அறிக்கைமீது நடவடிக்கை எடுக்கவில்லையென்று இன்று மாபெரும் ஊர்வலத்தை நடத்திக்கொண்டு கோட்டையை நோக்கி, வருகிறார்கள். அதுகுறித்து ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்பொழுதுதான் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்தீர்கள். அதைப் பார்த்தேன். எடுத்துக்கொள்வதா இல்லையா என்று இன்னும் தீர்மானிக்கப்படவில்லை.

திரு. இரா. கருப்பையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி நகரத்தில் கடந்த 8 வாரங்களாக 20,000-க்கும் அதிகமான பீடித் தொழிலாளிகள் போராட்டம் நடத்தி....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பீடித் தொழிலாளிகளைப் பற்றி நேற்றையதினம் நடந்த தொழிலாளர் நல மானியக் கோரிக்கையில் பேசி இருக்கவேண்டும். பேசி அமைச்சரிடம் வாக்குறுதி வாங்கியிருக்கலாம். பேசத் தவறியது உறுப்பினரது குறையே தவிர, என்னுடைய குறை அல்ல. (குறுக்கீடு) நேற்றுதான் தொழிலாளர் நல இலாகா மானிய விவாதம் முடிந்திருக

கிறது. தொழிலாளர் நல மானியக் கோரிக்கையில் நேற்றைய தினம் திரு. கருப்பையா பேசி இருக்கிறார். அப்பொழுது, இது பற்றி அவர் பேசி இருக்கலாம்.

திரு. இரா. கருப்பையா : நேற்று அது பேசப்படவில்லை.

மாண்புமிகு திரு. க. இராமச்சந்திரன் : முக்கியமான பிரச்னையாக இருந்தால் நேற்றே பேசியிருப்பார். முக்கியமானதாக இல்லாததால் தான் அவரே பேசவில்லை. ஆகவே, நாம் ஏன் எடுத்துக்கொள்ளவேண்டும் ? (குறுக்கீடு.)

திரு. இரா. கருப்பையா : சட்டப் பேரவைத் தலைவருடைய பதிலே கிடைக்கவில்லை, நிராகரிப்பும் கிடைக்கவில்லை. (கூச்சல்-குறுக்கீடுகள்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 20,000 பேர்களுடைய பிரச்னை என்றால், முதலில் அதை எடுத்துப் பேசியிருக்க வேண்டும். எனக்கு இருக்கிற கடமைகளை வலியுறுத்துகிறீர்களே தவிர, மாண்புமிகு உறுப்பினர்கள் என்ன கடமைகளைச் செய்ய வேண்டுமென்று நினைத்துப் பார்க்க வேண்டும் அல்லவா ? இதைச் சொல்வதற்காக மாண்புமிகு உறுப்பினர் பொறுத்துக் கொள்ள வேண்டும்.

திரு. இரா. கருப்பையா : தனியாக, விசேஷமாக, அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வருவதற்குத்தான் ஒத்தி வைப்புத் தீர்மானம்..........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் அமைச்சருடைய கவனத்திற்கு எத்தனையோ வகையிலே கொண்டு வரலாம். இதை ஒத்தி வைப்புத் தீர்மானத்தின் மூலமாகக் கொண்டுவர முடியாது. மானியக் கோரிக்கை வரும்போது மாண்புமிகு உறுப்பினர்கள் அதுவும் குறிப்பாக, தொழிலாளர்கள் சம்பந்தப்பட்ட தலைவர்கள் பேசுவார்கள் என்று நினைத்தேன். அதுதான் மரபே தவிர, உறுப்பினர் பேசாமல் விட்டுவிட்டேன் என்பது இது வரையில் புரிந்து கொள்ளாத ஒரு புதிர் : இனிமேல் தான் நான் விளங்கிக் கொண்டாக வேண்டும்.

திரு. எல். இளையபெருமாள் : தலைவரவர்களே, பாயிண்ட் ஆப் ஆர்டர். நான் 4 ஒத்திவைப்புத் தீர்மானங்களைக் கொடுத்திருக்கிறேன். சேலத்திலே உயிரோடு எரிக்கப்பட்டது, பாளையங்கோட்டையிலே ஒருவர் கொலை செய்யப்பட்டது. . . ..

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய உணர்வை முழுவதுமாக ஏற்றுக்கொள்கிறேன். ஆனாலும் பல்வேறு பிரச்சினைகள் வருகின்றன. அவையிலே ஒரு நாளிலே ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானம் எடுத்துக் கொண்டிருக்கிறோம். ஒத்திவைப்புத் தீர்மானம் வராத நாளே கிடையாது. ஆகவே மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் ஒத்திவைப்புத் தீர்மானத்தைத் திரும்பவும் பரிசீலிக்கிறேன். அதனை எடுத்துக் கொள்வதற்கு முயற்சி செய்கிறேன்.

3. ஒழுங்குப் பிரச்சினை

பேரவைக் கூட்டம் நடைபெறுகையில் நீதி விசாரணை குறித்து பேரவையில் அறிவிக்காது வெளியில் அறிவிப்பது—தொடர்ச்சி.

திரு. நா. சுந்தரராஜ்: தலைவரவர்களே, நேற்றைய தினம் எங்கள் கட்சியைச் சேர்ந்த திரு. சித்தன் அவர்கள் இங்கே ஒரு ஒழுங்குப் பிரச்சினை எழுப்பினார்கள். முதலமைச்சர் அவர்கள் கன்னியாகுமரியிலே நீதி விசாரணை சம்பந்தமாக அறிவித்திருக்கிறார்கள். எங்கள் உறுப்பினர் இது பற்றி எழுப்பிய போது மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் அது சம்பந்தமான அறிக்கை இந்த அவையிலே தாக்கல் செய்யப்படும் என்று சொன்னார்கள். ஆகவே முதலமைச்சர் அவர்கள் இது குறித்து வெளியே அறிவித்தது இந்த அவையை அவமதிக்கும் செயலாக நான் கருதுகிறேன். ஆகவே முதல் முறையாகக் கூடுகின்ற நேரத்திலேயாவது அறிவித்திருக்க வேண்டும். அந்த அறிவிப்பிற்குப் பிறகு இன்றைக்கு இரண்டாவது நாள் கூட்டமாகும் இப்போதும் கூட இந்த அவையிலே எந்தவிதமான தகவலும் தரப்படவில்லை. ஆகவே இது அவையினுடைய உரிமையினை மீறிய செயலாக இருக்கின்றது. எந்த ஒரு பிரச்சினையாக இருந்தாலும் அது சம்பந்தமாக அறிக்கை வெளியிடப்படுகின்ற நேரத்திலே உடனே அது குறித்து அவையிலே அறிவிக்க வேண்டும், இல்லை என்றால் அது கூட உரிமை மீறல் பிரச்சினையாகும் என்பதை கடந்த காலங்களிலே நாம் பார்த்திருக்கிறோம். ஆகவே நான் தெரிந்துகொள்ள விரும்புவது, இந்த அவைக்கு அந்த அறிக்கை சம்பந்தமாக நீதி விசாரணை சம்பந்தமாக ஏதேனும் அறிக்கை கொடுக்கப் போகிறீர்களா, இல்லையா என்பதுதான்.